සියලුම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது.
All Rights Reserved

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்

## ஆண்டிறுதிக் கணிப்பீடு - 2011

## தரம் - 11

## தமிழ் மொழியும் இலக்கியமும் - I

(Tamil Language & Lit) - I

சுட்டெண் :............................................................... நேரம் : 1மணித்தியாலம்

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
**1-40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. பொய் வைத்த **சொப்பனமாம்** மன்னன் வாழ்வும் - சொப்பனம் என்ற சொல்லின் ஒத்த பொருள் தரும் சொல்.

1. நனவு 2. நினைவு 3. கனவு 4. தினம்

02. கம்பன்தான் வந்திருக்கிறேன். **கதவைத்** திறவுங்கள். கதவு என்பதன் ஒத்தகருத்து.

1. கபாடம் 2. கபோலம் 3. விசாலம் 4. கடினம்

03. பெருஞ் செல்வர் இல்லத்து **நல் கூர்ந்தார்**. நல்கூர்ந்தார் என்பதன் ஒத்தகருத்து சொல்.

1. தனவந்தர் 2. பேராசைக்காரர் 3. தரித்திரர் 4. முயற்சியாளர்

04. திடீரென்று **ஞாபகம்** வந்துவிட்டது. ஞாபகம் என்ற சொல்லின் எதிரக்கருத்துச் சொல்.

1. நினைவு 2. அறிவு 3. அரும்பொருள் 4. மறதி

05. அவை நலம் **அன்பின்** விளங்கும். அன்பு என்ற சொல்லின் எதிர்ப்பொருள்

1. வன்பு 2. பாசம் 3. நேசம் 4. தாகம்

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

06. சபை, பொதுவில், மன்றம் என்ற சொற்கள் குறிக்கும் பொருள்.

1. அங்காடி 2. அரண்மனை 3. அந்தப்புரம் 4. அம்பலம்

07. சபதம், தீப்பந்தம் என்பன குறிப்பது.

1. சத்தியம் 2. சூள் 3. உண்மை 4. ஆணை

08. ராஜ்யம் என்ற வட சொல்லின் தமிழ் வடிவம்.

1. இராட்சியம் 2. ராச்சியம் 3. ராட்சியம் 4. இராச்சியம்

09. ஒரு தண்டிலே பல மலர்கள் சேர்ந்துள்ள பூக்கொத்து.

1. செண்டு 2. கூடை 3. சாடி 4. மஞ்சரி

10. ப.்க்ஸ் (Fax) என்பதன் சரியான தமிழ் சொல்.

1. தொலை நகல் 2. தொலை பேசி 3. கணினி 4. பெயர்த்தஞ்சல்

11. வைக்கோல் கற்றை எனப்படுவது போல பனை.

1. வரிசை  2. சோலை  3. கூட்டம்  4. தோப்பு

12. பின்வருவனவற்றுள் உவமைத்தொகை எது?

1. பகலிரவு  2. கொடியிடை  3. மரக்கிளை  3. சிறந்த பாடகர்

13. பின்வருவனவற்றுள் செப்பலோசையைக் கொண்ட பாவினம் எது?

1. வஞ்சிப்பா  2. அகவற்பா  3. வெண்பா  4. கலிப்பா

14. கலை நிகழ்ச்சிகளை மேடை ஏற்றுவதற்கு முன் சரி பிழை பாரத்துத் திருத்தும் நிகழ்ச்சி.

1. விமர்சனம்  2. அரங்கேற்றம்  3. ஒத்திகை  4. முன்னிகழ்வு

15. தபோதனர் வசிக்கும் இடம்.

1. குடிசை  2. அன்னசாலை  3. ஆச்சிரமம்  4. கானகம்

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

16. வயிற்றிலடித்தல் எனும் மரபுத்தொடரின் கருத்து.

1. உணவுண்ணல்  2. வயிற்றில் குத்துதல்
3. நட்டதையுண்டாக்குதல்  4. பிழைத்தல்

17. விலங்கொடு மக்கள் அனையர் என்பது.

1. அன் மொழித்தொடர்  2. உவமைத் தொடர்  3. சொற்றொடர்  4. விளித்தொடர்

18. அன்பு கொண்டு அனைவரையும் வசப்படுத்தலாம். அன்பு என்பது.

1. காலப்பெயர்  2. சினைப்பெயர்  3. குணப்பெயர்  4. இடப்பெயர்

19. நிலத்தின் உரிமை கொண்டாடுவதற்குச் சான்றாக எழுத்துருவில் அமைந்தது.

1. பத்திரம்  2. ஏடு  3. ஆவணம்  4. தோம்பு

20. நகர் எங்கும் தொழிற்சாலைகள் காணப்பட்டன. தொழிற்சாலைகள் என்பது.

1. தனிப்பெயர்  2. கூட்டுப்பெயர்  3. குணப்பெயர்  4. தொழிற்பெயர்

பின்வரும் வினர்க்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

21. நீ விரைவாக போதல் நல்லது. இதில் வரும் தொழிற்பெயர்.

1. நல்லது  2. நீ  3. விரைவாக  4. போதல்

22. "சப்பாத்து" என்பது எம்மொழியைச் சேர்ந்தது?

1. ஒல்லாந்து மொழி  2. போர்த்துக்கேய மொழி  3. பிரான்சிய மொழி  4. பாரசீக மொழி

23. வந்தேன் என்பதன் வினையடி.

1. வந்து  2. வந்த  3. வா  4. வருதல்

24. நான் இன்று போவேன், அவர்கள் செல்லவில்லை என்ற இரு வாக்கியங்களும்

1. உடன்பாடு மட்டும் உள்ளது  2. எதிர்மறை மட்டும் உள்ளது
3. உடன்பாடும் வினாவும் உள்ளது  4. உடன்பாடும் எதிர்மறையும் உள்ளது

25. பாடசாலை என்ற சொல்லில்

1. குறில், நெடில் உள்ளன
2. நெடில் மட்டும் உள்ளது
3. குறில் மட்டும் உள்ளது
4. எதுவும் இல்லை

26. வில்லுப்பாட்டுப் பண்புகளில் ஒன்று.

1. பேச்சுவழக்குச் சொற்பிரயோகம்
2. எழுத்துவழக்குச் சொற்பிரயோகம்
3. சமூகம் சாராதது
4. இசைக்கருவிகள் பயன்படுத்துவதில்லை

27. பகாப்பதம் என்றால்.

1. பிரிக்கமுடியும்
2. பிரிக்கமுடியாது
3. பொருளற்றது
4. 2 வகைப்படும்

28. சொற்கள் எத்தனை வகைப்படும்?

1. ஆறு வகைப்படும்
2. நான்கு வகைப்படும்
3. மூன்று வகைப்படும்
4. இரண்டு வகைப்படும்

29. உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை என்ற பழமொழி குறிப்பது.

1. பொய் கேட்டினைத் தரும்
2. உருட்டு நன்மை தரும்
3. எப்போதும் நன்மை விளையும்
4. உருட்டும் புரட்டும் சிறப்பினைத் தரும்

30. வந்த என்ற சொல்.

1. எச்சம்
2. முற்று
3. பெயர்
4. வினை

பின்வரும் பந்திகளின் பிரதான கருத்தைத் தெரிவு செய்க.

31. ஆரியம், சீனம், லத்தீன், கிரேக்கம், எபிரேயம் முதலிய ஒரு சில மொழிகளில் உள்ள ஆதி இலக்கியங்களே தமிழ் இலக்கியங்களின் அளவு பழமை வாய்ந்தவை.

1. தமிழ் மொழி இலக்கியங்கள் அதிக அளவில் பழமையானவை.
2. வேறு மொழிகளிலும் தமிழ் மொழி இலக்கியங்கள் போன்ற பழைய இலக்கியங்கள் காணப்படுகின்றன.
3. தமிழ் மொழி தவிர்ந்த ஆரியம், சீனம், லத்தீன், கிரேக்கம், எபிரேயம் மொழிகளில் ஆதி இலக்கியங்கள் காணப்படுகின்றன.
4. பழமை வாய்ந்த மொழிகள் பல இலக்கியங்களாகவுள்ளன.

32. ஹோமர் உவமைகளை வெகு அற்புதமாகக் கையாண்டுள்ளார். கம்பரும் அவர் போலவே உவமைகளைக் கையாண்ட அபிநவ கவிநாதன் ஆவார்.

1. ஹோமர் அபிநவகவிநாதன் அல்லர்.
2. கம்பர் ஒரு அபிநவ கவிநாதனாவார்.
3. இருவரும் உவமைகளைக் கையாண்ட கவிஞர்களல்லர்.
4. ஹோமர் ஒரு தமிழ்க் கவிஞர்.

33. இன்றைய மாணவர்கள் நாளைய சமுதாயத்தை உருவாக்குகின்ற சிற்பிகள். அவர்களின் சிந்தனை உணர்வுகள் சமுதாயம் சார்ந்து உருவாகின்ற போதுதான் அவை அர்த்தமுள்ளதாகுகின்றன.

1. இன்றைய சமுதாயச் சிற்பிகளாக நாளைய மாணவர்கள் காணப்படுவர்.
2. மக்களின் சிந்தனை சமுதாயம் சார்ந்து உருவாக வேண்டும்.
3. மாணவர்கள் சிற்பிகளாகவும் சிந்தனை உணர்வுள்ளவர்களாகவும் இருக்கும் போது அவை அர்த்தமுள்ளதாகின்றது.
4. சமுதாயம் அர்த்தமுள்ளதாக இருக்க மக்கள் சிற்பிகளாகவும் சிந்தனை உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) ஏழைக் குடும்பத்தில் பிறந்த சந்தியா படிப்பில் கெட்டிக்காரி. ஒழுக்கத்தில் சிறந்தவள், சிறுவயது முதல் ஒரு வைத்தியராக வரவேண்டுமென்ற இலட்சியத்தோடு படித்து வந்தாள். அவளது இலட்சியத்துக்குத் தடையாக பெற்றோரின் அகால மரணம், அன்புத் தம்பியைப் பாதுகாக்கும் பொறுப்பு என்பன அமைந்த போதும் அவள் தனது இலட்சியத்திலிருந்து மாறவில்லை............. முயற்சி திருவினையாக்கும் என்ற கருவை மையமாகக் கொண்டு ஒரு கற்பனைச் **சிறுகதை**.

**(25 புள்ளிகள்)**

(03) கீழே தரப்பட்டுள்ள உரைப் பகுதியின் சுருக்கத்தை 40-45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

இன்று உலகம் சுருங்கிச் சுருங்கி எல்லார்க்கும் எட்டுவதாகிவிட்டது. குடும்பத்தினுள்ளும் உலகம் நுழைந்துகொண்டுள்ளது. உலகம் வேறு குடும்பம் வேறு என்று எல்லை வரையறுத்தலும் அரிதாகிவிட்டது. போக்குவரவுக் கருவிகளும் செய்தித்தாள்களும் வானொலி முதலியனவும் உலகத்தை மிகச் சுருக்கிவிட்டன. வீட்டில் ஒரு மூலையில் இருந்தவாறே பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து பேசுவோரின் பேச்சை அந்த நொடியிலே கேட்க முடிகின்றது. நெடுந்தொலைவில் நிகழும் நிகழ்ச்சியை நிகழும் நேரத்திலேயே காணமுடிகிறது. உலகின் மூலைமுடுக்குகளின் செய்தி எல்லாம் அன்றன்றைக்கே வீட்டினுள் இருந்தவாறே தெளிவாகவும் பிழையின்றியும் செய்தித்தாள்களைக் கையிலேந்திக் கற்று அறிய முடிகிறது. இவற்றால் வீட்டின் எல்லையில் உடல் இருந்தாலும் உலகச் சூழலில் உள்ளம் வாழ நேர்கிறது. இவ்வாறு அறிவியல் முன்னேற்றம் எம்மை உலகத்தோடு பிணைத்து விட்டது.

இதன் பயனாக விளைந்தது என்ன? பழங்காலத்தில் ஒருவன் கண்டறிந்தனவும் கேட்டறிந்தனவும், சிலருடைய இன்பமும் துன்பமுமே இக்காலத்தில் ஒருவன் காண்பனவும் கேட்பனவும் மிகப்பலருடைய இன்பமும் துன்பமுமாகும். சிலருடைய வாழ்க்கையை மட்டும் கண்டு அவர்களுடைய இன்பதுன்பங்களை உணர்ந்த காலத்தில் மனம் பண்படும் வாய்ப்பு மிகுதியாக இருந்தது. அறிவு வளரும் வாய்ப்பு குறைவாக இருந்தது. உள்ளொன்று புறமொன்றாக நடிக்கத்தெரியாத நிலை இருந்தது. இன்பம் உணர்ந்து அமைதி பெற வாய்ப்பு இருந்தது. ஆனால் மிகப் பலருடைய வாழ்க்கையை அறிந்து அவர்களுடைய இன்ப துன்பங்களை உணரும் இக் காலத்தில் மனம் பண்படும் வாய்ப்பு குறைந்துவிட்டது. அறிவு வளரும் வாய்ப்பு மிகுந்துவிட்டது. உள்ளொன்று புறமொன்றாக நடிப்பதில் தேர்ச்சிபெற முடிகிறது. எவ்வளவு இன்ப நலன்கள் பெறினும் அமைதி கிடைத்தல் அரிதாகிறது. பிறர் துன்பங்கண்டு உருகும் தன்மை குறைகிறது. சுருங்கக் கூறின் அக்காலத்தில் பெரும்பாலோரின் மனம் குழையும் தளிர்போல மென்மையுற்று உணர்வுருவாக இருந்தது. இக்காலத்தில் அது மிகச் சிறுபான்மையோரின் தன்மையாகிவிட்டது. பெரும்பாலோரின் மனம் உரமான காழ்போல வன்மையுற்று மரத்துவிட்டது. (10 புள்ளிகள்)

(04) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.

பார்த்திடாத கட் டோகை யாலிடப்
பாம்பொ டுங்கிடக் காந்தள் வாய்விட
வேர்த்த வெம்மை போய் வளிகு ளிர்ந்திட
வேறு வேறு போய்க் கால் ளுன்றியே.

கொடைம டம்படுங் குமண மன்னவன்
கூறு சித்திரப் புலவ னுக்கருள்
மடைதி றந்திடுங் கொடைவி தங்கள் போல்
வயிறு ளைந்துமா மழைசொரிந்தவே

குக்கி புக்கவை யருவ ருப்பினால்
கொட்டி விட்டிடுங் கொள்கை போலவே
மைக்கண் மாமழை வழங்கு வாரிநீர்
மலைக்க ணின்றிமு மென்னப்பாயுமே

உருண்ட சிலைகள் ஒழிந்த வவல்கள்
உயர்ந்த மேடு பதிந்தவே
வெருண்ட கரடி விளிந்த வரவு
மிகுந்த வருவி பாயவே.

1. இங்கு புலவர் குறிப்பிட்டுள்ள மழை பொழிவதற்கு முன்னர் உள்ள காட்சி ஒன்றினையும் பின்னர் உள்ள காட்சி ஒன்றினையும் எழுதுக.
2. மழை பொழியும் காட்சியை விளக்கப் புலவர் கையாண்ட அணி யாது? விளக்குக
3. "பார்த்திடாத கட்டோகை யாலிட" இதன் பொருளை உமது சொந்த உரைநடையில் எழுதுக.
4. இங்கு அருவியின் வேகம் மிகுந்தது என்பதை விளக்கும் பாடலடி எது?

5. ஒத்த கருத்து தருக.
(அ) வாரி நீர்
(ஆ) வவல்கள் (10 புள்ளிகள்)

(05) எமது நாட்டில் வீதி விபத்துக்கள் அதிக அளவில் இடம்பெற்று வருகின்றன. இதற்குக் காரணம் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்தமையே ஆகும் என பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்தியை ஆதரித்தும் வாகன விபத்துக்களுக்கான பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்டும் பத்திரிகை ஆசிரியருக்கு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக. (15 புள்ளிகள்)

All Rights Reserved

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்

## ஆண்டிறுதிக் கணிப்பீடு - 2011

## தரம் - 11

## தமிழ் மொழியும் இலக்கியமும் - III

(Tamil Language & Lit) - III

சுட்டெண் :.............................................................................. நேரம் : 2 மணித்தியாலம்

❖ **ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**
**1,2.3.4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ம் வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.**

(01) சுருக்கமான விடை தருக.

1. "காப்படங்கென் றன்னை கடிமனை யிற் செறித்
தியாப்படங்க வோடி யடைத்தபின்"...... இத் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.

2. "ஐயோ! இந்தக் குழந்தையின் மனதைக் கூட என்னால் திருப்தி செய்யக் கூட வில்லையே"

(அ) இக்கூற்று இடம் பெறும் சிறுகதையின் ஆசிரியர் யார்?
(ஆ) இங்கு குழந்தை என்று குறிப்பிடப்படுபவர் யார்?

3. நச்சுப்படாதவன் செல்வம் எதனுடன் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது?

4. இது மாபெரும் அறச்செயல் இதைத் தடுப்பது என் நோக்கமல்ல. ஆனால்...... இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது.

5. "தோட்டை மிதித்தந்தத் தோட்டுடு பாய்ந்து சுருள் அளகக் காட்டை மிதிக்கும்" இத்தொடரில் இடம் பெற்றுள்ள அணி யாது? விளக்குக.

6. "செங்கோன்மை" என்ற அதிகாரக் குறட்பாவைத் துணைக் கொண்டு செங்கோல் மன்னனின் சிறப்புக்களில் ஒன்றினைக் குறிப்பிடுக.

7. கவ்வாத்துக் காரப் பையா
கத்தி வெட்டும் பாண்டி மன்னா

(அ) இப்பாடலடிகளைப் பாடுபவரது மன உணர்வு எத்தகையது?
(ஆ) இது எப்பிரதேசத்திற்குரிய பாடல்?

8. "கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றுப்பிற" இக்குறட்பாவின் கருத்தை எழுதுக.

9. "அம்பொன்று வில்லொடிதல் நாண் அறுதல் நான்
கிழவன் அசைந்தேன் என்றோ.
வம்பொன்று குழலாளை மணம் பேசி வரவிடுத்தார்.
மன்னர் தூதர்"

இத்தொடரைக் கொண்டு கூட்டி எழுதுக.

10. "பார்வைகள்" எனும் சிறுகதையில் சமூகத்தின் தனி மனித பிரச்சினையைப் புலப்படுத்தும் கதாபாத்திரம் எது?

(10x2=20 புள்ளிகள்)

(02) பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.

(அ)

வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல் பஞ்சிற் பாயாது - <u>நெட்டிருப்புப்</u>
<u>பாரைக்கு நெக்கு விடாப் பாறை பசுமரத்தின்</u>
<u>வேருக்கு நெக்கு விடும்.</u>

(ஆ) மருப்பூசியாக மறங்கனல்வேல் மன்னர்
உருத்தகு மார்போலையாகத் - திருத்தக்க
வையகம் எல்லாம் எமதென் றெழுதுமே
மொய்யிலை வேல் மாறன் களிறு.

(இ) மக்கள் விலங்குகளினும் உயர்ந்தவர்கள் என்று சொல்வது ஏன் என்றால், நல்லது இது, தீயது இது என்று பகுத்துணர்தலானுந் தம்மைப் போன்ற உயிர்க்கு இரங்கித் தம்மாலான உதவி செய்தலானுந் தமது அறிவை வளரச் செய்தற்குரிய பல நூல்களைக் கற்றலானுமே மக்கள் விலங்குகளினும் உயர்ந்தவராக எண்ணப் படுகின்றனர்.

(ஈ) அப்பொய்கையில் இலங்கிய அழகிய மலர்கள் முக மலர்ந்து இருவரையும் அருகே அழைப்பனபோல் அசைந்தன. அவ்வாவியின் தன்மையும் செம்மையும் கண்ட இருவரும் தாய் முகம் கண்ட சேய் போல மனம் களித்து அந் நன்னீரைப் பருகி மகிழ்ந்தார்கள் அருந்தாகத்தால் வருந்திய இருவருக்கும் தண்ணீரை எடுத்து வழங்கும் தன்மை போல் அடுக்கடுக்காக அலைகள் கரையருகே வந்து சேர்ந்தன. (05x4=20 புள்ளிகள்)

(03) நள வெண்பா சுயம்வர காண்டப் பகுதியில் தமயந்தி நளனுக்கு மாலையணிந்த முறைமையும் மணமக்கள் ஊர்வலத்தின் வர்ணனையும் எடுத்துக்காட்டப்பட்டிருக்குமாற்றை விளக்குக.

அல்லது

(அ) "நிலவாய் விளங்குதல்......." என்ற பாடலினூடாகக் காளமேகப் புலவரின் கவித்துவச் சிறப்பு வெளிப்படுமாற்றை விளக்குக.

(ஆ) ஒப்பிலாமணிப் புலவர் இரவு நீடிப்பது பற்றிய தலைவியின் ஏக்கத்தை எவ்வாறு புலப்படுத்துகிறார்? (15 புள்ளிகள்)

(04) பாரதியார் கவிநயம் எனும் கட்டுரையில் பாரதியார் கவிதைகளில் காணப்படும் சிறப்புக்கள் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றன என்பதனைப் பாடல்களை ஆதாரமாகக் காட்டி விளக்குக.

அல்லது

ஒரு பதி விரதையின் சரித்திரம் என்ற கதையை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) யௌவன சந்நியாசியின் குணவியல்புகள்
(ஆ) கதை உணர்த்தும் விழுமியக் கருத்துக்கள் (15 புள்ளிகள்)

**5,6,7 ஆம் வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.**

(05) நீதிப்பாடல்கள் பகுதியில் வாக்குண்டாம், நாலடியார் பாடல்களில் இடம்பெறும் உவமைகளை எடுத்துக் காட்டி விளக்குக. (10 புள்ளிகள்)

(06) நல்லார் கைப்பட்ட செல்வத்தையும், பொய்கையையும் ஆசிரியர் ஒப்பு நோக்குமாற்றை "நல்ல மரமும் நச்சுமரமும்" என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

(07) பின்வரும் கதாபாத்திரங்களின் குணச்சிறப்புக்களை விளக்குக.

(அ) மங்கையர்க்கரசி
(ஆ) குஞ்சம்மாள் (10 புள்ளிகள்)